பிஸமில்லாஹி

162/1-82

இஃது,

அய்யூபு நபியினுடைய கிஸ்ஸா

இதனை,

பேட்டை ஆமூரிலிருக்கும்

வாவலப்பாவசாயபு அவர்கள்

குமாரராகிய

அப்துல்காதிர்சாயபு

அவர்குமாரராகிய

அப்துல்வஹ்ஹாபுசாயபு

அவர்களியற்றியது.

இதனை,

வளத்தூர்செயமண்டி

உசைன்சாயபுபிள்ளை

குலாமுகையதீன்சாயபு

அவர்கள்கேட்டுக்கொண்டபடி,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௬௨வது பிப்ருவரி

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

அய்யூபுநபியினுடைய கிஸ்ஸா.

அல்கம்துலில்லாஹிறப்பில் ஆலமீன்வஸ்ஸலாத்தோ வஸ்ஸலாமோ அலாஸய்யதுல்முர்ஸலீன் வஅலா ஆலிஹி வஅஸ்ஹாபி ஹி அஜ்மயீன் அம்மாபஅது இந்த அய்யூபுநபியுடையகிஸ்ஸாவை பேட்டை ஆமூரிலிருக்கும்வாலைபாவசாயபு, அவர்கள்குமாரராகிய அப்துல்காதிர்சாயபு அவர்குமாரராகிய அப்துல்வஹ்ஹாபுசாயபு அவர்யாவருக்குந் தெரியும்பொருட்டு கோர்வைச்செய்தனர்.

மிகுந்தசிறப்பு மழுகுமலைபோலுயர்ந்தக் கோட்டைமதிலும்நெருக்கிய மாடகூடங்கணிலாந்த அரண்மனைகளும் வயல்களுஞ் செழித்தக்தோப்புகளுஞ் சூழ்ந்த ஷாமுதேழுமென்னும் பட்டணத்தில் (ஆமூசென்) பவரொருவரிருந்தார் அவருக்குப் பணமுமுடிகளாடுகளொட்டகங்கள் கோவேறுக்கழுதைக ளிவைகளதிக மிச்சமுள்ளவராகவிருந்தார். அப்பட்டணத் [illegible] வருக்கு சரிசமானமாக சீமான்களொருவருமில்லை அப்படிப்பட்ட [illegible] டைய மகனாக நற்குணமு நன்னடைப்புமிகுந்த அழகுள்ளவராக அய்யூபுநபியென்றொருபிள்ளையொன்றுபிறந்தன அப்பிள்ளையே மிகுந்தசெல்வமாக வளர்த்துவந்தார் அப்படிவளர்ந்தே திவருநாளில் அக்த ஆலாவின்கட்டளையின்படி (அமூசென்பவர்) இறந்துபோனார். அதன்பின்பு அவருடைய சொத்துகள்யாவற்றும் அய்யூபுநபிக்கியர்ய்விட்டது அப்பொழுது அவருக்குவயது மூப்பதாகவிருந்தது இப்படியிருக்கிறநாளையில், கின்ஆனென்னும் பட்டணத்தில் யூசுபுநபியினுடையமகனாக (அபறாயீம்) என்றொருவரிருந்தார் அவருடைய மக்ளாக மிகுந்த அழகும் [illegible]யும் சங்கையு மொழுக்கமுங் கற்பழியாத புத்திரியாக (பீவிறஹீமாவென்பவள்) ஒருபெண் பிறந்தது அப்பெண்பேரில் மிகுந்தபிரியமு மின்பமுமாக வளர்த்துவந்தார் அப்படியிருக்கையி லோரிரவு (அபறாயீம்) என்பவர் படுத்துநித்திரைசெய்யும்போது கனவில் தன்தகப்பனாகிய யூசுபுநபியுல்லாவந்து தன் மேலிருந்தக்குப்பாயத்தைக் கழட்டி பீவிறஹீமாவிறகு இட்டு (ஓ) றஹீமாவே இக்குப்பாயமாகிறது என்னுடைய அழகையு மறிவையுஞ் சங்கையு முனக்குச்கொடுத்துவிட்டேனென்று சொல்லும்படி கனவுகண்டு முழித்துக்கொண்டார் அன்றுமுதல் (அபறாயீம்)என்

வர் தன்மகன்பேரில் மிகுந்தகிருபையுமாக விருப்பார் அப்படியிருக்கையில் பீவிறஹீமா வணக்கத்திலு மொழுக்கத்திலு நட்பிலுமிருந்தவராய் உலகத்தினுடைய பாக்கினை தாராக்கி ஒழிந்தவராயிருந்தா ரிப்படி நடந்தேறிவருகிறநாளையில் ஷாமுதேயத்திலுள்ள அய்யூபுநபி அலாகளுக்கு இன்ஆன் பட்டணத்திலுள்ள பீவிறஹீமா உடைய ஒழுக்கத்தின் பிரசங்கங்களைக் கேள்விப்பட்டு அப்பெண்ணை தான் மணம்புரியவேணுமென்று ஆசையோடு மிகுந்த திரவியங்களை யெடுத்துக்கொண்டு இன்ஆன் ராச்சியத்திற்குவந்துசேர்ந்து (அபறுயம்) என்பவரைக்கண்டு நான் ஷாமிலுள்ளவர் என்பெயர் அய்யூப் எனக்குஉன் மகள் (றஹீமாவே) மணமுடித்துக்கொள்ள விருப்பமாய் நாடிவந்திருக்கிறேனென்று சொல்ல அம்மொழியையவர்கேட்டு இவருடையவணக்கத்தையும் குணத்தையு நன்னடப்பையும் பணத்தையும்பார்த்து நல்லது அப்படியே ஆகட்டுமென்றுசொல்லி நிக்காச்செய்துகொடுத்தார். அப்பே[illegible]து அய்யூபுநபி (றஹீமாவே) வாகனத்திலேற்றிக்கொண்டு தன்னுடையபட்டணம்வந்து சேர்ந்தார். பின்பு அத்தஆலா பனிரெண்டுகுலில்பனிரெண்டு ஆண்பிள்ளைகளையும் பனிரெண்டு [illegible]ண்பிள்ளைகளையுங்கொடுத்தான். அவர்களை தங்களுடைய கூட்ட[illegible]ர்கள்பேரில் அதாக அனுப்பிவைத்தார். அய்யூபுநபிக்கு அக்தஆ[illegible]கொடுத்திருக்கிற நற்குணத்தையு நற்கிருபை சங்கைமுதலியவைகளை[illegible]தர்களெல்லாம் பார்த்து சகலபேர்களு மிவரை மெய்யானநபியென்று உண்மையோடு அவருடைய மார்க்கத்தையு மொப்பிக்கொண்டு அவருடைய சிறப்பிற்காகவும் அவருடைய தகப்பமார்களின் சிறப்பிற்காகவும் வழிப்பட்டு ஈமான்கொண்டிடவு மவர்களுக்கு தன்னுடைய மார்க்கத்தின் வழியினடப்புகளை கற்றுக்கொடுத்து என்னேரமும் வணங்குவதற்காக பள்ளிகளையுங் கட்டவைத்து வ[illegible]ணங்கிவந்தார்கள். இன்னமும் அய்யூபுநபி தான் பசியா[illegible]போது பக்கிர்[illegible]கீன்களுக்கு சோறுகறிகளளித்து உண்டுவருவார். இன்னம் த[illegible]லாத பிள்ளைகளின்மேல் தகப்பன் செய்யுங்கிருபைபோ[illegible]ருஷனில்லாத பெண்களின்பேரில் புருஷமார்செய்யுமான கிருபைபோலும் உதவியொத்தாசையும் வல்லமையில்லாதவர்களுக்கு உவந்த உடப்பிறப்புமார் செய்யுநன்றியேபோல நன்றிகள்செய்து உட[illegible]பிறந்தாமார்போலவிருந்தார்.

இன்னமவரிடத்தில் வேளாண்மைப் பயிர்வேலைச்செய்யும்வேலைக்காரர்களையுந் தோட்டத்திற்குக்காவலாயிருக்கிற காவற்காரர்களையும் பழவர்க்கமுதலிய தானியங்களை தின்பதைக்கொண்டு அவர்கள்மே

ல் கோபித்துக்கொண்டு விலக்கிறதுமில்லை இன்னம் பறவைகள் தோப்பிலுள்ள பழவர்க்கங்களைத் தின்றாலும் நாற்காலிகள் பயிர்களை மேய்ந்தாலும் அதுகளை ஓட்டாமல் காவற்செய்யுங்களென்று சொல்லுகிறதுமில்லை விலக்கிறதுமில்லை. அதேதெனனில், அல்லாசுபகானுத்தஆலா அவருக்கு அளவற்ற பருக்கத்துகளை வேளாண்மைபயிர்களுந் தோப்பின் கனிவர்க்கங்களிலுங் கொடுத்திருந்தபடியினால் வருஷத்திற்கு இரண்டுமேசல்விளைந்துக்கொண்டிருந்தது. இன்னவருடைய நாற்காலிகள் வருஷத்திற்கு இரண்டுதரந்தோலாய் - ஒன்று-இரண்டு-மூன்றுகுட்டிகள் போட்டுக்கொண்டிருந்தன. இன்னுமவர் சந்தோஷமாகிறதில்லை இராவுகாலம் வருமேயானால் தன்னைச்சேர்ந்தவர்களையெல்லாமழைத்துக்கொண்டு இராவெல்லாம் அந்த ஆலாவினுடைய வணக்கங்களைச்செய்து பஜர்நேரம்வருமேயானால் தன்னுடன்சேர்ந்து இரவெல்லாம் வணங்கிக்கொண்டிருந்தோர்களுக்கும் ஏழைமிஸ்கீன்களுக்கும் சோறுகறிகளாக்கவைத்து அவர்களெல்லாம் புசியாறி சந்தோஷமடையும்படியாகக் கொடுப்பார். இதுவுமின்றி கணக்கில்லாதபணங்களை தினந்தோறும பகீர்மிஸ்கீனுக்குக்கொடுப்பார். இன்னமவருக்கு ஆயிரம்பெண்குதிரையும் ஆயிரம்ஆண்குதிரையும் ஆயிரம்பெண்கோவேறுகழுதையு மாயிரமாண்கோவேறுகழுதையும் மூவாயிரமாவொட்டகமும் அய்யாயிரம் பெண்ணொட்டகமு மாயிரமெருதும் ஆயிரம் பசுவும் பதினாயிரம் ஆடுகளுமாக இப்படிப்பட்ட சம்பத்தினையுடைய வாழ்வு முண்டாயிருந்தது இந்தநாற்காலிகளுக்கு (௫௱) உருவிற்கு ஒரு இடையனை வைத்திருந்தார். இப்படியே (௪௱-௫௱) உருவிற்கு ஒவ்வொரு இடையர்களைவைத்து மேய்க்கவைத்திருந்தாரே அவ்விடையர்களுடையபெண்டாட்டிமார்களுக்கும் பிள்ளைகளுண்டு இப்படிப்பட்ட வாழ்வும் பருக்கத்தும் சிறப்பும் மேன்மையும்பெற்று வாழ்ந்துவருகிறநாளையில் ஒருநாள் இபுலீசு லகுனதுல்லா அய்யூபுநபியுடைய பணங்காசுநாற்காலிகளுமுதலிய வாழ்வினைப்பார்த்து இப்படிப்பட்ட வாழ்வு மாடாவொட்டகமுந் தோப்புகளு மொருமனிதனுக்கே யுலகத்திலில்லையேயென்றுபெருமூச்சுவிட்டு எரிச்சலும்பச்சலு மனதிலடைத்து நாமிவனைக்கெடுக்கவேமென்றால் இவர்தன்னுடையசொற்றுக்கெல்லாம்சக்கரத்துக்கொடுத்துக்கொண்டுவருகிறாரேயெப்படி அழிக்கிறது இதற்குஇடமில்லையேயென்று ஷசித்தான்மயக்கிவிட்டான். அக்காலத்தில் இபுலீசுமறுந்தூலவுறனத்தல்லா ஏழுவானத்தின்மேல்போக்குவரத்தாகவிருந்தது அவ்வானங்களில் தான்வேண்டியதலங்களிலிருப்பவனாகவுமிருந்தான் அதன்பின்பு அந்த ஆலாசோதியேகாலம்வானத்திலுயர்த்தினானே அ

ன்றுமுதல் நாலாம்வானம்போக வல்லமையற்று நீக்கப்பட்டான். பின்
பு மூன்றுவானத்தளவும் போக்குவரத்தாயிருந்தான். இப்படியிருக்கு
ங்காலத்தில் குதரத்துப்பொருந்திய அல்லாசுபுகானுத்தஆலா தன்றஹ
மத்தைக்கொண்டு முகம்மதுமுஸ்தபா ஸல்லல்லாகு அலைஹிவஸல்ல
மவர்களை இந்தபூமியிலனுப்பினானே அன்றுதொடுத்து இபுலீசுக்குமு
தல் வானத்திற்குச்செல்லவும் வல்லமையற்று ஒதுங்கிப்போய்விட்டா
ன் அய்யூபுநபியுடையகாலத்தில் ஏழுவானம்வரைக்கும்போகவு மங்கு
நினைத்தவிடத்திலிருக்கவும் வல்லமையுடைய இபுலீசு ஏதோ ஒருகுறா
ஏ எண்ணத்தை மனதினுள்நினைத்து வானத்தளவு போக்குவரத்தாயி
ருந்தான். அப்போது அல்லாகுத்தஆலா மறைசியம் பரசியமெல்லாம
றைவின்றி யறிபவனானபடியால் இபுலீசுகொண்ட சூதான கருத்தையறிந்
து (அடாமல்கூனே) உன்னுடைய மனதிலென்ன காரியத்தை நினைத்
து நீயிங்கே வந்தாயென்று அல்லாகேட்க அதற்கு இபுலீசு என்
னுடைய (றப்பே) நான் என்னுடைய உத்திரவிற்கு மாறுசெய்யாமல்
உன்னைவழிப்பட்டோர்களைக் கெடுத்து மோசத்திலாக்கிவைக்
க இப்பூமியெங்குஞ்சுற்றிப்பார்த்து அப்படி உன்னைவழி செய்பவர்க
ளையெல்லாங்கெடுத்து என்வசமாகஎன்னடப்பிலாக்கிக்கொண்டேனெ
ன்றான். அப்பொழுது ஜயபாக அல்லாகுத்தஆலாவினுடைய சத்தமு
ண்டாயினது (ஓ) கேடடைந்த இபுலீசே நீ என்னுடைய அப்தா
கிய அய்யூபு நபியே நன்றாக அறிந்தாயா அவருக்கு நானின்
டலயதைக்கொடுத்து அதிகசெல்வத்திலாக்கியிருக்கிறேன் அவனை
க்கலைத்துக்கெடுக்க உன்னால்முடியுமா அவனென்னுடைய உக்குமிற்கு
மாறுசெய்யாமலுடன்பட்டு வழிப்பட்டிருக்கிறதைவிட்டு உன்வசமாக
அவனைத்திருப்பிக்கொள்ள உனக்குவல்லமையுண்டாவென்று கேட்க
அதற்கு இபுலீசு என்னுடைய ஆண்டவனே சகலத்தையுமறிபவனே நீ
அவனுக்கு நலத்தைக்கொண்டு கிருபைசெய்திருக்கிறாய் இன்னமுமவ
ன்பேரில் மலக்குகள் [illegible] வல்ல துவாக்கள்செய்துகொண்டிருக்கி
றார்கள் அப்படிப்பட்டவருடைய விஷயங்களைப்பார்த்தாலெனக்குஒன்று
ந்தோன்றவில்லை அதேனெனி லவருக்கு சகலவாழ்வுகளையு நீ கொடுத்
து சரீரசுவாத்தியமாக பெண்சாதிபிள்ளைகளோடு பெரியகுடும்பத்தா
னாகக் கணக்கில்லாத நியாமத்துகளைக் கொடுத்திருக்கிறபடியினாலே அ
வருனக்கு வழிப்பட்டு உன்பேரில் சுக்கூருசெய்துகொண்டிருக்கிறார்
அப்படிப்பட்டவருக்கு நீ முசிபத்தையும் கஷ்டத்தையும் கொடுத்து
சோதிப்பாயாகி லப்போதவர் இப்போது உனக்கு வழிப்பட்டிருப்ப

துபோல வழிப்படமாட்டானென்றான் ஆகையா லென்னை நம்மவ
ருடைய பணத்தின்பேரில் சாட்டுவாயாகில் நானதை அழித்துவிடுவே
னதனாலவருனக்கு வழிப்படமாட்டார் அவ்விஜனத்தினாலுன்னை நினைக்
கவுமாட்டானென்றான். அதுகேட்டு நாயன் அடா மலூனே நீயோ
மிகுந்தபொய்யன் சூழ்கேடன் சத்தியன் அவனையுன்வசமாகத் திருப்பிக்
கொள்ள உனக்கு வல்லமையுண்டாகாதென்றும் நீ அவருடைய நினை
வையுமானநிலையையறிகிறதற்க கவேண்டி. அவர்பணமுதலிய சம்பத்
[illegible]வைல இன்றுஉன்னைசாட்டினேனென்றுசுயமாக ஆக்கஅலாவினு
டைய சத்தமுண்டாயினது.

அதுகேட்டு இபுலீசுலஹனத்துல்லா சீக்கிரமாக அபீலென்
பவரைகாபீல்கொலைச்செய்ககு[illegible]ந்தசற்ப்பாறையொன்றிருந்தது அக்க
ல்லிலென்னோமுங் குருதிக்[illegible]ப்பளித்து ஓடிக்கொண்டிருந்தது
அக்கல்லின்மேல்வந்துநின்று[illegible]ட்காந்து இ[illegible]டினமாக ஒரு
சத்தமிட்டான் அந்தசத்தத்தை[illegible]க்கேட்டவுடனே மஷ்ரிக்குதொடுத்
துமகரிபுவரைக்குமிருந்தஷயித்தான்களெல்லா மவனிடத்தில் வந்து
கூட்டமாகநின்று உனக்கென்னகேடுபிடித்தது வனிப்படியுரைத்தச
த்தமாகக்கூப்பிட்டாயென்னவயணஞ்சொல்லென்றுகேட்டதுகள் அ
துகேட்டு இபுலீசுலஹனத்துல்லா ஷையித்தான்களே நான் [illegible]
யேசுவர்க்கத்தைவிட்டு வெளிப்படுத்தி[illegible]த்தநாள்முதலாக இதுவரை
க்கும்சந்திரிப்பில்லாமலிருந்தது இன்னுகொஞ்ச மிடம்பாடுண்டாயி
[illegible]து அதென்னவெனில் இன்றுஎன்னை அய்யூபுநபியினுடையபண
த்தின்பேரிலும் உடைமைகள்பேரிலும் நாற்காலி சீவன்கள்பேரிலுந்
தோட்டப்பயிர்முதலியவைகள்பேரிலும் அழிக்கும்படி அல்லாகுத்த
ஆலாஉத்திரவுகொடுத்து சாட்டியிருக்கிறான் ஆகையால்நீங்களதுவெ
ல்லாம் அழித்து நாசமாக்கிப்போ[illegible]களென்றுசொல்ல அந்தப்பெரி
யஷையித்தானுடைய சொல்லை யிந்த[illegible]ஷையித்தான்களெல்லாங்கே
ட்டு (ஓ எங்களுடையராஜனே யெங்க[illegible]ளவில் சாட்டினால்
நாங்கள் தோப்பளவில்சென்று தோட்டப்பயிர்களையெல்லா மழி
த்து நாசமாகும்படிசுட்டெரித்து சாம்பலாக்கிப் போடுவோமென்று
சொல்லிட அதுகேட்டு இபுலீசுமிகுந்தசந்தோஷ[illegible]ய நீபோயழித்து
விடுவாயென்று அனுப்பிவைத்தான் பின்னுமற்றொருஷையித்தானெ
ழுந்து (ஓ) ராசனேயென்னை அவருடையமிருகஜாதியின்பேரில் அதி
காரஞ்செய்யும்படி சாட்டுவாயாகில் நானிடுமொருசத்தத்தினால் அது
களுடைய உயிர்களெல்லாம் பஞ்சுபறப்பதுபோல பறந்துபோகிட

செய்வேனென்றுசொல்லிட அதுகேட்டு இபுலீ[ஸ்] ம்ஹாகளிப்படைந்து அந்தஷயித்தானை நாற்கால்மிருகஜாதியின்பக்கமாக அனுப்பிவைத்தான் அப்பொழுது ஒருஷயித்தான்தோப்பினுள்புகுந்து அந்த்தோப்பு மரத்திலுள்ளகனிகளையும் எரித்துசாம்பலாக்கிவிட்டது மற்றொருஷயித்தான் மிருகஜாதிகளுடைய கூட்டத்துள்புகுந்து ஒருசத்தமிட்டது அந்தசத்தத்தினால் நாற்கால் மிருகங்களடங்கலும் அதுகளைமேய்த்துக்கொண்டிருந்த இடையர்களும் இறந்துபோனார்கள் பின்பு இபுலீசலஹுனத்துல்ல அய்யூபுநபியுடைய இடையனுடைய சூறத்தைப்போலவடிவெடுத்துக்கொண்டு அய்யூபுநபியின் கிட்டேவந்து மூன்றுபேர்களில் மிகுந்தவிஜனபாக (ஓ) நபியே உம்முடைய நாற்கால் மிருகங்களடங்கலுங்நெருப்பாய்ப்பற்றியெரிந்து விட்டதுகள் அந்தநெருப்பில் நானுமகப்பட்டுக்கொண்டேனதனாலென்முகமுங்கருப்பாய்விட்டது அந்தத்தீயினுடைய புகை வானத்தின்புறமாகவிருந்து கீழிறங்கிவந்தது அதிலிருந்து ஒருசத்தம்வந்தது அந்தசத்தத்தை யென்காதினாலேகேட்டேனது என்னவெனில் அந்தஆலாவினுடைய முகமென்றுமனிதர்களின் முகத்தைநாடி முகதாட்சணைக்காக வேண்டி அமல்செய்கிறவர்களுக்கு துனியாவிலிதுதானவர்களுக்கு தண்டனையென்றுச்சொல்லினது அந்தசத்தத்தைநான்கேட்டேன் (ஓ) நபியே [illegible] நானொருவன் தவிரமற்றவர்களெல்லாமிறந்துவிட்டார்களென்றுசொல்லக்கேட்டு அதற்கு அய்யூபுநபி ஒருஜவாபுஞ்சொல்லாமல் தான்தொழும்தொழுகையின்பேரில் அடுத்தமனமாக பேணிக்கையோடு தொழுது முடித்துபின்பு இடையன் சூறத்தாகவிருக்கிற இடையன்முகத்தைப்பார்த்து அடா நீயென்னபினத்துகிறாய் ஓ அறிவில்லாதவனே புத்தியற்றவனே ஆடுகளையுமாடுகளையுங் கழுதைகளையுங் குதிரைகளையும் ஒட்டகங்களையும்படைத்து எனக்குக்கொடுத்தவன் அல்லாசுப்ஹானஹுத்தஆலா[வா]வன் நானும் இவைகளெல்லாமவனுடையபடைப்பேயன்றி [illegible]ல்ல என்னுடையசொத்துகள் யாதொன்றுமில்லை அவனுடையசொத்தை அவனுடையபடியெல்லாஞ்செய்ய குதரத்துள்ளவனென்றுசொல்ல அதுகேட்டு இபுலீசுநபியேநீர் நிஜத்தைச்சொன்னீரென்றுதனக்குள்தானே வெட்கிற்றுப் போயினான் அப்பொழுது அறிவில்லாதமனிதர்களொன்றுக்கொன்று கூட்டங்கூட்டமாகக்கூடி அய்யூபுநபி அவருடைய நபிதனத்தில் நிஜமுள்ளவரல்ல அப்படிநிஜமுள்ள நபியேயானால் உயிருள்ளஜீவன்களெல்லாம் செத்துப்போகும்படி ஆண்டவனதுகளுயிர்களைவாங்குவானா அவர்நபியல்லாதபடியினாலே இன்று அவர்மேல்கோபமாய் சகலத்தையுமழித்தா

ப்போட்டாவென்று பேசிக்கொண்டிருந்தார்கள் இச்செய்தியே அய்
யூபுநபிகேட்டு மிகுந்தமனவருத்தமாகி அவர்களுக்குயாதொரு ஜவா
புஞ்சொல்லாமல் அத்தஆலாவினுடையகட்டளையின்மேல் மனமுன
ளவராய்ப்புகழடங்கலு மவனுக்கேயன்றிமற்றொருவருக்குமில்லையென
ப்புகழ்ந்து சபுருடனேபின்பு இபுலீசைநோக்கி ஓ கேடடைந்த அடி
யானே நீயாகிறவன் அத்தஆலாவினுடைய நியாமத்தைத்தவிட்டும் சந்
நிதானத்தைவிட்டும் நீக்கிவிட்டானே அவனுயிருப்பாய்ஆகையால் நீ
யிப்போது என்னருகிலில்லாமல் தூரமபோய்விடு நீபழிக்கப்பட்ட
வனேயன்றி புகழப்பட்டவனல்லவோ ஆழுந்திருக்குமாகிய சதிமான
ஞ்செய்கிறவனென்றுசொல்ல அதைக்கேட்டு இபுலீசு நன்மைகசெய்ய
திங்குவிளைந்ததென்றபழமொழியேபோல நானுனக்கு நல்லச்செய்தி
களைச்சொல்லவந்ததற்கு யென்னைநீயிப்படிபட்ட பொல்லாங்கான
மொழிகளைச்சொன்னாயென்றுசொல்லிட அப்போது அய்யூபுநபி
ன்னுந்தான் வணக்கஞ்செய்யத்திரும்பினார் அப்போது இபுலீசுவெற
த்தல்லாமுகபங்கப்பட்டு நாணங்கொண்டு அவ்விடத்தைவிட்டுத்திரும்
பி வானத்திலேறி தானிருக்குந்தலத்திற்குவந்து எண்ணமோடிருந்தா
ன் பின்பு கல்லெறியப்பட்ட ஷெய்த்தானே என்னுடைய அப்தாகிய
அய்யூபுநபிடஞ்சென்று அவனைச்சோதித்துப்பார்த்தாயா அவருடை
யபணங்களுமாடாடு ஒட்டகமுதலியதோப்[illegible]ட்டியார்களு
மாக்கட்டில்லாதவாழ்வுள்ளசியாமத்துகளடங்கலுமழிந்து [illegible]தே
குறித்து எள்ளளவாவது சஞ்சலமடைந்து திக்கமாயென்னைக்
கொண்டாரா இன்னமுமவருடையகூட்டத்தாரடங்கலு மவருடைய
கட்டிதனத்தைப்பொய்யாக்கிவிட்டார்களே அதைகுறித்துஞ் சாயைப்
பட்டாமல்சபுற்செய்து என்னைவணக்குவதின்பேரில்மிகுந்தபெணுத்தி
யின் பூணிப்பாகவிருக்கவும் பார்த்தாயா அவருக்கு இப்படிப்பட்ட
லக்கங்கள்வந்து நேரிட்டும் என்னையெப்படிப்புகழ்ந்தார் நீவெட்க
மப்போகும்படி உன்னையெப்படிப்பட்ட [illegible]ங்கஞ்செய்துவிட்டா
ர் பாரென்று கயனாக அத்த ஆலாவினுடைய சத்தமொன்றுவந்தது அ
ந்த சத்தத்தை யிபுலீசுக்கேட்டு என்னைப்படைத்தவனே நீயவருக்
குக்கொடுத்திருந்த வாழ்வுகளின்பேரி லெள்ளளவும் பிரியமுள்ளவ
ல்ல இன்னமுலகத்தில் தாய்தந்தையருக்குபிள்ளைகளின்மேல்மிகப்பி
ரியமுண்டு ஆகையால் நீயவருக்குமிகுந்த பிள்ளைகளைகொடுத்திருக்கி
றாய் அதனாலவர்போனசொத்துகளை அப்பிள்ளைகளினால் சம்பாதித்
துக்கொள்ளலாமென்கிற நாட்டத்தைக்கொண்டு அசட்டையாகவிரு
க்கிறார் ஆகையாலென்னை அவருடையபிள்ளைகளின்மேல்சாட்டினால்

காணப்பிள்ளைகளை நலாக்காகதிவிடுவேன் அ[illegible]லவர் உன்வனக்கத்
தை அவ்விஜனத்திலேவிட்டுவிட்டு முகந்திருப்பிக்கொண்டு என்று
டையமாயவலையினுள் சிககியென்வழியிலாய் விகவாரென்று சொ[illegible]
னுன் உடனேவானின்புறமாயிருந்து 'அடா மர்வூதாகிய [illegible]லஊனந்து
பெற்றவனே நீ அவரிடத்திலொருதரம்போய் முகமங்கம்[illegible]டு வெட்
கிறறு தலைகவிழ்ந்தாயே அதுஒன்றேபோதாதா அடா அறிவில்லாத
பொய்யனே பின்னு நீயென்னையெப்படிகேட்டாயோ அப்படியேநானு
னக்குக்கொடுத்தேனென்று கயபாக அந்தஆலாவினுடையசத்தமொ
ன்றுவந்தது அந்தசத்தத்தைக்கேட்டவுடனே இபுலீசுசீக்கிரமாகவெ
ழுந்து அய்யூபுநபியுடைய பிள்ளைகள்கூடியிருககிற மாடத்துக்குள்வ
ந்து அவர்களைப்பார்த்து மனவெறுப்பாக அம்மாளிகையையசைத்தா
ன் அதனாலம்மாளிகையிடிந்து விழுந்து சிலர்மடிந்து போனார்கள்பி
ன்பு சிலரைவாள்கொண்டுவெட்டி (ஜந்துஸ்) என்கிற இடத்தில் வி
ழும்படியாக தூக்கியெறிந்துவிட்டான் அப்போது அந்தபூமிக்கு அ
ந்தஆலாவினுடைய உத்திரவாயினது-ஓ-பூமியே நீ அய்யூபுநபியினுடை
ய பிள்ளைகளைபபேணிக்கொள் அவர்களுடையசதையேதின்னவேண்
டாம் எலும்புகளையு முறிக்கவேண்டாம் நானவர்களையென்னுடைய
வேண்[illegible]தலையைக்கொண்டு அமானத்தில்வைத்திருக்குறேன் நீயொ
ன்றுஞ்செய்ய[illegible]ன் அந்தஉத்தரவின்படி பூமியொன்றுஞ்
செய்[illegible]லை அதில் ஆண்பிள்ளைகளின்பெயராகியது-புஜமக்கு-மக்கப
ல்-[illegible]ஸது-றஸீது-மகூயூ-பனீறு-அபுறாகுவென்றும்பெண்பிள்ளைக[illegible]
ன்பெயராகிறது-நமூறுகானத்து-அபீகத்து-ஸாலிகா-[illegible] - அபி[illegible]
இ[illegible]கையா-மூமீனுவென்று[illegible] மற்றபெண்[illegible]களின்பெயர்கள்வர[illegible]
ல்லை.

பின்பு [illegible]புலீசுலஹுற[illegible]துல்லா அய்யூபுநபியினிடத்திற்குவ
[illegible]து-ஓ-அயயூபே [illegible]ன்னுடையமாடகூடமெல்லாமிடிந்து இன்று கபர்
களாய்விட்டது உ[illegible]னுடைய மக்களெல்லா மாடமிடிந்தகல்லுகள்
யெல்லாமவர்கள்பேரில்விழுந்து கல்லுகளுக்கிடையிலகப்பட்டு இறந்
துபோனார்களென்று சொல்லினுன் அச்செயதியே அய்யூபுநபிகேட்
டு விஜனப்பட்டழுதார் பின்பு அயயூபுநபி தானழுததைதன்னைத்துகை
சேதப்பட்டு மண்ணிலிருந்து ஒருபிடிமணணையெடுத்துத்தன் தலைமே
ல்போட்டுக்கொண்டு தானழுததைக்குறித்துத் தன்குற்றத்தைபொறு
க்கும்படியாக சிசுதாச்செய்வதுபோல முட்டிமோதக் கீழேவிழுந்து
பின்பு சிசுதாவைவிட்டெழுந்து என்னுடனே யென் பிழையைப்பொ

னுக்கிடுமென்றுவாக்கேட்டு பிறபுஇபுலீசுடையமுகத்தைப்பார்த்து ஓ-லஊனத்துப்பெற்ற மூதேவியே யென்னால் நீமுசபங்கம்பட்டோனாயற்றவனாகவுமென்னிடத்தைவிட்டு நீங்கிவிடு என்பிள்ளைகளடங்கலையுமெனக்கு அல்லாகுத்தஆலா இவ்வலாகக்கொடுத்தான் அப்படியிருப்பதால் அவன்தன்னுடைய அப்துகளைதான்நாடியபடியெல்லாஞ்செய்யகுறைத்துடையவனென்றுசொல்ல அதையிபுலீசுக்கேட்டு முசபங்கமாகிவெட்கிற்று அவரிடம்விட்டுத்திரும்பி வானத்திலேறி தானிருக்குமானவிடத்தி லெண்ணமோடிருந்தான் அப்போதுவானத்தின்புறமாகவிருந்து-அடாகல்லெறியப்பட்ட ஷயித்தானே நீயென்னுடைய அப்தாகிய அய்யூபைசோதித்துகண்டாயா அவருடையமனவுறுதியைப்பார்க்கவில்லையா அவர்தன்னுடைய பிள்ளைகளடங்கலுமிறந்துபோனதைக்குறித்தும் பணமுதலியவாழ்வுகளெல்லாமழிந்துபோனதுகளைக்குறித்தும் எள்ளளவுஞ்சலிப்பின்றி யெப்படிசபற்செய்தார இன்னமுமவருடைய ஈமானின் உறுதியைப்பா[illegible] அவர்தான்செய்தகுற்றத்தைநினைத்து சலிப்படைந்து என்புறமாகத்தவ்பாசசெய்து பிழைபொறுக்கத்தேடினதையுங் காணவில்லையாவென்று அல்லாகுத்தஆலாவினுடையசத்தமுண்டாயினது அந்தசத்தத்தைக்கேட்டு இபுலீசிலஊனத்துல்லா சகலவற்றையும்படைத்து ஆளுமானநாயனே நீஅய்யூபைசரீரசுவாத்தியமாகவைத்திருப்பதினாலே அவரொன்றையும் சட்டைச்செய்யாமல் ஆங்காரித்திருக்கிறார் ஆகையால் நானவரை யெனக்குவழிபடுத்திவைக்க என்னால்முடியவில்லை நீஅவருடைய உடலின்மேல் என்னைசாட்டிவைப்பாயாகில் நான்செய்யுமானதைக்கொண்டு அ[illegible]செய்யாமல் போவாரதனால் அவரைநானெனக்கு வழிபடும்படி திருப்பிக்கொள்வேனென்று சொன்னான் அதுகேட்டு அத்தஆலா (ஓ) லஊனத்துச்செய்யப்பட்டவனே யுன்னையவரளவில் சாட்டுகிறேன் நீயவருடைய கண்ணிரண்டுங் [illegible]ண்டும் நாவுங்கல்புங்க[illegible]மற்றசரீரமடங்கலுமேலு[illegible]னை சாட்டிவிட்டேனென்றுசொல்லினான் அதுகேட்டு இபுலீசுடனே பூமியிலிறங்கி அய்யூபுநபியிருக்கவிஜனத்தோடு பள்ளியிலிருந்து அச்சுபஹானுகுத்த ஆலாவிடத்தில் தன்னுடைய பலாமுசீபத்தடங்கல்பேரிலும் சபறுஞ்சுக்கூறுஞ்செய்து பிழைபொறுக்கும்படிகேட்டுக்கொண்டிருந்தார் அங்குவந்து இபுலீசு அவருடைய வேலைகளெல்லாமுடிகிறவரைக்கும் வழிபார்த்துக்கொண்டிருந்தான் அப்போது அய்யூபுநபிநாயனளவிலகேட்குமானது வாக்களடங்கலுங்கேட்டு முடிவானபி

வீபு தொழுகைக்காகவேண்டிநின்று சுஜுதாச்செய்தார் அப்போது இ ப்லீசலஹனத்துல்லா நமக்கு இதுதான் நல்லசமயமென்றெண்ணி பூமிக்குள் புகுந்து பூமியைக்கிழித்து அவர் முசுஜதைத்திருக்கிற இ டத்திற்குநேராகவந்து அவருடைய இரண்டுமூக்கினுள்புகும்படி ஊ ழுந்துவிட்டெரியும்படியான ஒரேநெருப்பின் காற்றையூதினான் அ க்காற்றானது அவருடைய மூக்கினுட்புகுந்தவுடனே அச்சூட்டின் வேகத்தினால் அவருடைய முகங்கறுத்துப்போயினது பின்பு அந்த அக்கினிகாற்றானது அவருடையசரீரமடங்கலும் புகுந்துபரவினது அந்தசூட்டினாலவருடமேலிருந்தரோமங்களெல்லாம்விழுந்துபோயி னது உடல்முழுதுஞ்செக்கன்பழம்போல கொப்பளித்துப்போயின து அவருடையதிருமேனியின்வடிவுமாறிவேறுவேறாய்விட்டது இர ண்டாம்நாள் உடல்முழுதும் வீங்கினது மூன்றாநாள் அவ்வீக்கம்பெ ரிதாயினது நாலாநாள் உடலெல்லாமுழுதுங்கன்னங்கரேலென்றுகறு த்துப்போயினது ஐந்தாநாள் உடல்முழுதும் சீழ்பிரமாயினது ஆ றுநாள் புழுக்கள்விழுந்தது ஏழாநாள் உடலிலிருந்து நச்சுத்தண்ணீ ரொழுந்து ஓடினது அப்போது உடலில்சொறியுந்தினவுமுண்டாயின து அந்தத்தினவினாலொருமாதமளவுஞ் சொரிந்துக்கொண்டிருந்தார் அதனால்கைகளிலிருந்தநகங்களெல்லாம்விழுந்துபோயினதுபின்பு அ ந்தத்தினவு அடங்கசிப்பிகளைக்கொண்டும் சொரிபிடித்தகற்களைக்கொ ண்டுஞ்சொறிந்துக்கொள்வார் அதிலுங்கொஞ்சமாவதுதினவு அடங்க மாட்டாது இன்னமும் உடலிருக்கிறபுழுக்களிலிருந்து ஒருபுழுநழுவி கீழேவிழுந்துவிடுமேயாகில் அப்புழுவையெடுத்து தன்னுடல்மேல்வி ட்டுக்கொண்டு (ஓ) புழுவேயென்னு[illegible]தையைத்தின்று என்னு யிரத்தைக்குடி அல்லாகுத்தஆலா என்னு[illegible]டயவியாதியைமாற்றி சு வாத்தி[illegible]ாக்கிவைக்குமளவும் உன்னுடைய பசியை யாறிக்கொள் ளென்றுசொல்வார் இப்படி[illegible]ந்தேறிவரும் நாளில் பீவிறஹீமா தன் புருஷனாகிய அய்யூபுநபியின் முகத்தைப்பார்த்து (ஓ) நபியே நம்மு டைய திரவியமுழுதும் உடைமைகள் முழுது நாடாடு ஒட்டகம் கு திரைகோவேறுகழுதைகள் முதலியவைபிள்ளைகளடங்கலுமழி ந்துபோய்விட்டது தங்களுக்கு உடலில்தங்கடமும் வெளியாயினது இப்படியாக உலகத்தில் ஆபத்து முஸீபத்துபலவுந்தங்கடமும்வ ருத்தமுஞ்சலிப்புமொருவருக்கும்வந்திருக்கமாட்டாது அது தங்களு க்குண்டான காரணமென்னவென்று மிகுந்தசலிப்பானதுக்கத்தோடு கேட்க அதற்குஅய்யூபுநபி அறிவுந்தெளிவுமுள்ள றஹீமாவே நீயறிய வில்லையா முதல்முதல் அல்லாசுபகானுத்தஆலா ஆதநபியைப்படைத்

ந் அவரைசுவர்க்கத்தில் குடியிருக்கச்செய்து அந்தசுவர்க்கத்தில்
கோதுமைக்கனியொன்றுதவிர மற்றக்கனிகளையெல்லாந் தின்னவும்
உடைகளையுடுக்கும்படியாகவும் உத்தரவுகொடுத்து கட்டளைச்செய்தா
ன அவரும்அந்தஅல்லாவினுடைய கட்டளையின்படி சகலவியாமத்து
களையுந்தின்று உடைகளையுமணிந்து மிகுந்தசந்தோஷத்தோடு சவுக்
கியமாகவிருக்கும்போது அவருடையகுற்றத்தினால் சுவர்க்கத்தை வி
ட்டுவெளியாக்கி துனியாவிலிறக்கிவிட இங்குவந்தவர்மிகுந்தவருத்த
மெல்லாமடைந்து பின்சவுக்கியத்தை[illegible] அடைந்தபின்னர்சு
வர்க்கத்திலவாழ்விற்குமுன்[illegible]யவாழ்வுகளின்மகிட்சியும்ஜ
ருவினுவிற்குசரியாக அவிருக்குங்காணவில்லை.

இன்னமுமவருக்குப்பின் நூருநபியென்பவர்கள் அவருடைய ந
பிபட்டத்திருணையில் அவருடைய கூட்டத்தாரால் பெற்றுக்கொண்
டவருத்தங்களையிம்மட்டென்று சொல்லமுடியாது அந்தக்கூட்டத்
தார்களோ இகலாத்தனவில்கூடப்பிடுவாராகி லட்டி[illegible]வர்களெல்லாம்
வெறிப்பிடித்தவன்வந்தானென்று அவரைச்சூழ்ந்துகொண்டு அவ
ர்மூறையைப்போகவுயிர் நீங்கள்ளவுமடித்து கீழேவிழுந்தபின்பு
காலைப்பிடித்திழுத்துக்கொண்டுபோய் குப்பையில்போட்டுவிட்டு சி
ரித்துக்கொண்டு போய்விடுவார்கள் இப்படிவெகுநாள் மட்டவரைவ
ருத்தஞ்செய்துக்கொண்டிருந்தார்களிதுமன்றிபின்பு இபுறாகீம் நபி
பிறந்து அவருடைய நபிபட்டத்தின்காலத்தில் பொல்லாவம்பனுகிய
நமூறூனென்பவசுலாத்திலழைக்க அவனுஞ்செய்யாதவருத்தங்களையெல்
லாஞ்செய்து ஒன்றுமுடியாமல் கடைசியில் அக்கினிகுண்டத்தைவ
ளர்த்து அதிலவரைத்தள்ளினான் அவரைநெருப்பு ஒன்றுஞ்செய்ய
வில்லை பின்பு யூசுபுநபிபிறந்தார் அவருடைய வடிவைக்கண்டு தமைய
மார்கள் இகலவருத்தமெல்லாங்கொடுத்து இன்றறினார் தள்ளிபின்புமா
விக்கி அவருக்குபத்து[illegible]க்குவிலைக்குவிற்றுப்போட்டார்கள் பின்பு
சுலைமாபெயனவிசகிடத்தில் இடை[illegible]பொன்றுக்குவாங்கித்
தன்பேச்சையவர்கேட்கவில்லையென்று [illegible]சிறைச்சாலையி
லடைத்து வருத்தப்படுத்தினார் இப்படியெல்லா நூன்னுள்ளநபிமார்
களுக்கு பலாமுசிபந்துவருததங்களைவிட்டு அல்லாதுக்கு ஆலாசோதி
த்தான் அதனையவர்களெல்லாஞ்சபர்செய்தார்கள் அப்படிசபர்செ
ய்திறவர்களுக்கு நால்நலமான சந்தோஷத்தைக் கொடுபபேனென்று
அல்லாகுத்தஆலா திருவுளமாயிருக்கிறுனென்று பலபல அறிவுகள்
சொல்லிவிட்டு அப்படியே சிசுதாவிலென்னுடைய (தப்பே) நீ என்
னைக்கொண்டு என்பனைவலுசிய இபுலீசவனைத்தல்லாவைசந்தோ

தொழுஞ்செழிப்பு முடையவைக்கவேண்டுமென்று (துவா)க்கேட்டார்
அப்போதுபீவிரஹீமா அய்யூபுநபிப்படு கிறவருத்தபலாமுசீபத்
துகளை தன்கண்ணாற்கண்டு பொறுக்கமுடியாத விசனத்தோடிருப்ப
தை அய்யூபுநபிகண்டு அப்போதுபீவிரஹீமாவேபார்த்து நீநபிமார்
களுடையபிள்ளைகளிலுள்ளப்பெண்நான்படுகிறதுன்பங்களைப் பார்த்
துகேசவிப்படையாதே அல்லாகுத்தஆலா ஒருபலாமுசீபத்தைவிடு
வானாகில்அதுகளைக்கொண்டுஸபர்செய்யவேணும் அல்லதுவாழ்வோ
டுநியாமத்தையுங் கொடுப்பானாகில் அதைக்கொண்டு சுக்கூறுசெய்ய
வேணுமென்றுசொல்லிபின்பு அல்லாகுத்தஆலாவினளவில் (யாறப்
பே)நீறஹீமாவிற்குஸபரைக்கொடுவென்று துவாக்கேட்டார்பின்புநாளு
க்குநாள்வியாதியானதுபெருப்பமாய்உடலிலிருந்துசீழ்களுநச்சுத்தண்
ணீர்களுமோடத்தலைப்பட்டது அப்போதுஅய்யூபுநபிதன்பெண்சாதி
யாகிய றஹீமாவேபார்த்து(ஓ)றஹீமாவேயென்னுடையஉடலிலிருந்து
ஓடிவருகிறசீழினாலும்நச்சுத்தண்ணீரினாலும்இப்பள்ளியெங்கேனனைந்
துப்போகிறதோவென்று அச்சப்படுகிறேன் ஆகையாலென்னையிவ்வி
டத்தைவிட்டுமாற்றிவேறொரு இடத்திற்கெடுத்து சுமந்துக்கொண்டு
போய்வைக்கவுநானிருக்கவொருஇடமும்என்னைஎடுத்துசுமந்துக்கொ
ண்டுபோகஆளும்பாரென்றுச்சொன்னார் அச்சொல்லை பீவிறஹீ
மாகேட்டு ஓடோடியுஞ்சென்றுகொண்டுபோய்வைக்க ஒருஇடத்தை
யும்பார்த்து இவிடத்தில்கொண்டுபோய் வைக்கலாமென்றெண்ணி
அய்யூபுநபியிடத்திற்குவந்துநபியேதாங்களிருக்க இடத்தைப்பார்த்து
வந்தேன் இனியும்மை அவிடத்திற்குக்கொண்டுபோவதற்காக ஆள்
களை அழைத்துவருகிறேனென்றுசொல்லி முன்னால்அய்யூபுநபியிடத்
தில்வரத்துப்போக்காகவிருந்து அவிடத்திலளவற்றப்பிரயோசனங்க
ளைப்பெற்றுச்சந்தோஷமடைந்தமனிதர்களிடத்திற்குப்போய்மிகுந்தசன்
றிபாக்கியபிரயோஜனங்களையடைந்தோர்களேயின்றுஅய்யூபுநபிபள்ளிக்கு
ள்ளிருக்கமிகுந்த அச்சப்பட்டு இன்னவிடத்திற்குப் போகவேணுமெ
ன்றுசொல்லுகிறார் அவர்அவிடத்திற்குநடந்துபோகவல்லமையில்லா
தபடியினாலேயவரோ அவர்களெடுத்துக்கொண்டு போகவேண்டியதாயிரு
க்குது ஆனபடியினாலேநீங்களுதவிசெய்து அவரையெடுத்துக்கொண்
டுபோய்வையுங்களென்றார் அந்தச்சொல்லையவர்களெல்லாங்கேட்டு அ
ய்யூபுமேல்அவருடையஆண்டவன் மிகுந்தகோபமாய் அவர்முகதாட்
சணைக்காகவணங்கினவரென்று அதைவெளியாக்கிவிட்டான் ஆகையா
லெங்களுக்குமவருக்குமிடையில்வானபூமிக்குமெப்படி இடையாயிரு
க்குதோ அப்படி அவனைக்கொண்டுநாங்களுமெங்களைக்கொண்டு அவரு

விலகி யிருக்கிறோம் ஒரு போதும் காங்க ளவரிடத்திற்கு வரமாட்டோமென்று சொல்லி விட்டார்கள் அந்த சொல்லைளை பீவிறகிமா கேட்டு முத்து திர்வதுபோல் கண்ணீரை விட்டழுது கொண்டு அய்யூபுநபியிடத்திற்றுவந்து இந்த செய்திகளையெல்லாஞ் சொன்னார்.

அதுகேட்டு அய்யூபுநபி பீவிறஹிமாவேபார்த்து உலகத்தில்பாலாமுஸீபத்தடைந்தவர்களுக்கு உதவியாத்தாலச்செய்யப்பட்டவர்களப்படமாட்டார்கள் ஆகையாலின்று எனக்குமிகுந்த பசியுண்டாயிருக்குது வென்றுசொல்லிட அதுகேட்டு பீவிறகிமா அவிடம் விட்டுவெளியெவந்து முன்னால் அய்யூபுநபியிடத்தில் தானதருமங்கள் பெற்றுக்கொண்டமனிதர்களிடத்தில்போய் இன்றுநபி மிகுந்தபசியாயிருக்கிறார் அவர்பசியாறிக்கொள்வதற்காக வேண்டியதேதாவதுங்களிடத்தில் ஷீபமிருந்தால் கொடுங்களென்று மிகுந்ததாழ்மையோடு கேட்க அதுகேட்டவர்களெல்லாம் அவர் அல்லாகுத்தஆலாவிற்காக அமல்செய்தவரல்ல மனிதர்களைமெச்சுக்கொள்ளவும் முகதாட்சிணைக்காகவும் அமல்செய்தவர் ஆகையால் அவரையாண்டவன் மிகுந்தஅசுசையைக்கொண்டு பிடித்திருக்கிறான் ஆனபடியாலவருக்குநாங்களொரு பிடிசோறுங்கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள் அதுகேட்டு பீவிறகிமா மட்டில்லாசஞ்சலத்தோடு மெத்தமனவருத்தத்தோடு இச்செய்திகளையெல்லாம் நபியிடத்தில் வந்துசொன்னார் அதுகேட்டு அய்யூபுநபி பீவிறஹிமாவேபார்த்து பலாமுஸீபத்தடைந்தவர்களுக்கு உலகத்திலிரணமகப்படுகிறது வருத்தமாகவிருக்குமென்று சொல்லிப்பின்னும் சதுக்காவாகிறது நபிமார்களுக்கு ஹலாலல்ல ஆகையால் மனிதர்களிடத்திற்குப் போய் கூலிவேலைகள் செய்து எதாவது அவர்கள் கொடுக்குமான கூலியைவாங்கிக்கொண்டு வாவெனச் சொல்லியழுதார் நபியழுகிறதைப்பார்த்து பீவிறகிமா நீரென்னத்தைநினைத்து அழுகிறீர்சொல்லுமென்றுகேட்க அதற்கு அய்யூபுநபி பீவிறஹிமாவே மிகுந்ததுப்பாவாகிய அழகுநிறைந்த[illegible]த்தையுடையவள் உன்னுடையமுகத்தின்வடிவைப்பார்த்து இவ்வூரிலுள்ளோர் கேடுகெட்ட ஜாகில்களிருக்கிறார்கள் அவர்கள்பாவத்துக்கஞ்சாதார்கள் அப்பாவிகள் உன்பேரில்மோகித்து என்னசெய்வார்களோ வென்றும் இபுலீசுடையமாயத்தைநினைத்தும் நானழுகிறேனென்றுசொன்னார் அச்சொல்லைக்கேட்டு பீவிறகிமா மிகுந்ததுக்கங்கொண்டழுது அல்லாகுத்த ஆலாவினுடையநபியே அவனுடையஇச்சத்தின்பேரிலாணையாக உங்

குப்பின் நான்மனிதர்களைக்கொண்டு மென்னுடைய இரண்டு கண்க
ளால் ஒருபிரயோசனமும் பெறத்தக்கதாகப்பார்க்கமாட்டே னென்று
சொல்லியிருந்த சலிப்பாகவிருப்பதை அய்யூபுநபிகண்டு நீயின்றுபோ
ய்க்கூலிவேலைச்செய்து என்பசியடங்கத்தக்கதாக ஏதாவதுகொண்டு
வாவென்று விடைகொடுத்தனுப்பினார் அவ்விடையைப் பெற்றுக்கொ
ண்டு அன்றுமுதலாக பீவிறகீமா அவ்வூரி லுள்ளோர்களுக்குத் தண்
ணீர்கொண்டுவார்க்கிறதும் வீடுவாசல்களைச்சுத்தியாகவிளக்கிறதும் கு
ப்பைகளையெடுத்துதூக்கி வெளியேகொண்டுபோயப் போடுகிறதுமாக
இப்படி பலவிதமானவேலைகளைச்செய்து அவர்கள் அதற்காகக் கூலி
யாக சோறுகொடுப்பார்கள் அதை வாங்கிக்கொண்டுவந்து நபிக்குக்
கொடுத்து பசியாறவைப்பார் இப்படிநடந்தேறிவருகிறநாளையில் ஒரு
நாள் இபுலீசுலவுனத்துல்லாமனவெறுப்பாகி ஒருகிழவனுடைய ரூபத்
தாகி அவ்வூராரிடத்தில்வந்து அவர்கூடியிருக்கிறகூட்டத்தைதப்பார்த்து
ஓ மனிதர்களே உங்களுக்குக்கொஞ்சமாகிலும்அறிவுந்தெளிவும் ஆலோ
ஜனையுமில்லையா அய்யூபுடையபெண்சாதி அவருடையவியாதிக்கு உ
டன்பட்டவளாகி சீழிலும்நச்சுத்தண்ணீரிலும் கலந்துபுரண்டுகொண்
டிருக்கிறாள் அப்படிப்பட்டகெட்டபெண்பிள்ளையே நீங்களுங்க ளு
டையவீட்டிற்குள்ளாதொருதடையுமின்றி உங்களுடையவீட்டிற்குள்பு
குதுகிறதும் வீடுவாசல்களைவிளக்குகிறதும் தண்ணீர்க்கொண்டுவந்து
கொடுக்கிறதும் அதேதீன்கள்வாங்கிக்கொண்டு உங்களுடைய உண
வையிலுந் தின்பண்டத்திலுங் குடிப்பதிலு மவளுடையகைகால்படும்படி
புளங்காஞ்செய்துவருகிறீர்களே அது உங்களுக்கு அருவருப்பில்லையா
இன்னமுமப்படிப்பட்டபெண்ணோடு கலந்திருக்கலாமாவென்று அ
வர்களுடையமனங்கள் பிடிக்குமான பலபலபோதனையின் மொழிகளை
ச்சொல்லி போதித்தான் அவன்சொன்னமொழிகளையெல்லா மவர்க
ளெல்லாருங்கேட்டு இதுசரியான பேச்சென் றுஉண்மைகொண்டார்க
ள் பின்பு அவர்கள் பீவிறகீமாவைபார்த்து இன்றுமுதலாக இனி
மேல்நீயெங்கள்வீட்டிற்கு வரவேண்டாம் எங்களுக்குப் பணிவிடை
வேலைகளுஞ்செய்யவேண்டாம் சோறுமாத்திரம்வந்துவாங்கிக்கொண்
டுபோவென்றார்கள் அவர்கள்சொன்னதை பீவிறகிமாகேட்டு இத்த
ங்கதிகளை நாயகநபியிடத்தில்போய்ச்சொல்லினால் அவருடையமனதி
ற்குவருத்தமும் விசனமுமுண்டாகுமென்று சொல்லாமலவர்கள்கொடு
க்கும் சோற்றைமாத்திரம்வாங்கிவந்து நபிக்குக்கொடுத்துக் கொண்டி
ருந்தார்கள் இப்படிநடந்தேறிவரும்நாளையில் அய்யூபுக்கு நோயான அ

நாளுக்குநாளுயர்ந்துகொண்டேவந்தது அவருடையவுடலெல்லாம்வெ
டித்து சீழும்நரசந்தண்ணீரும் ஒழுக நாற்றமுமுண்டாயினது அந்
தநாற்றத்தையவ்வூரிலிருக்கிற ஜனங்கள்பொறுக்கவும் சகிக்கவுமுடியா
மல் எல்லாமொன்றுக்கூடி நாமிந்தநாற்றத்தைநாமெப்படி பொறுத்
துக்கொண்டிருக்கிறது வீடுவாசல்களெல்லாமோநாற்றமாய் விட்ட
தே ஆகையாலவர்பேரிலிடையர்களுடையநாய் அவனைக்கடித்துத் தி
ன்னும்படியாய் அனுப்பலாமென்றுயோசித்தார்கள் இந்த செய்தியை
பீவிறஹிமாக்கேட்டு நபிக்குச்சொன்னார் அதுகேட்டு அய்யூபுநபி றஹி
மாவே உயிரானவைதச்செய்யும் புலிநாய்முதலியவைகளுக்கு நபிமார்க
ளுடையசதையை அல்லாஹறுமாக்கியிருக்கிறான் ஆனதால்நான் நபி
யாகவிருக்கிறேன் என்னையந்தநாய்களொன்றுஞ்செய்யமாட்டாதென்
றுசொன்னார் பின்புவூராரெல்லாங்கூடி அய்யூபுநபியேதின்றுபோகும்ப
டியாக இடையர்களுடையநாய்களையெல்லாஞ் சேர்த்து நபிபேரிலே
விட்டார்கள் அந்தநாய்களெல்லாம் அய்யூபுநபியிடத்திற்குஓடிவந்து அ
வரைப்பார்த்து நடுநடுங்கி பயந்தோடிப்போய்விட்டதுகள் பின்புவூரா
ர்களெல்லாமொன்றாய்ச்சேர்ந்து நபியிடத்தில்வந்து ஓநபியே யுன்சரீ
ரத்திலுண்டாயிருக்கிற கொடியநாற்றத்தைப்பொறுக்கஎங்களுக்குவ
ல்லமையில்லை நீயெங்கேயாகிலும் புறப்பட்டுப்போய்விடும் இல்லாவி
டில் கல்லாலடிப்போமென்றுசொன்னார்கள் அச்சொல்லை நபிகேட்டு
ஓஎன்னுடைய கூட்டத்தார்களே என்னைநீங்கள்கல்லா லடிக்காமல்
ஊரைவிட்டுஎங்கேயாகிலும் கொண்டுபோய்விட்டு விடுங்களென்று
சொல்லிட ஊராரெல்லாம் வாயைமூடிக்கொண்டு ஊமையர்போல்போ
ய்விட்டார்கள் பின்பு அய்யூபுநபி பீவிறஹிமாவைப்பார்த்து இந்தவூரார்
களெல்லா மென்பேரில்கோபமாய் மிகுந்தசலிப்படைந்துபோனார்கள்
ஆகையாலினிமேல் நாமிந்தவூரிலிருக்கலாகாது ஆனதால்நாமெங்கேயா
வதுபோவதற்கும்உதவிசெய்கிறவர்களல்ல நீமுச்சந்திவீதியில் போய்
நின்றுக்கொண்டிரும் யாராவதுவேறுமனிதர்க ளவ்வழியில்வந்தாலவர்
களுககுஎன்னுடைய ஹாலையுமிந்தவூரார்களுடைய நடத்தையையுந்
தெரியும்படிசொல்லென்று அனுப்பிவைத்தார் அவ்விடையைப்பெற்
றுக்கொண்டு பீவிறஹிமா அவ்வூரைவிட்டுவெளிப்பட்டு வேறொர்சின்ன
வூரில் நபியிருக்கவிடம்பார்த்துவிட்டுப்பின்னுந்திரும்பி அவ்வூரின்முச்
சந்தியில்வந்துநின்றுக்கொண்டிருக்கும்போது அப்பால்தயாகசந்திர
னொளிவைபோல்முகமிலங்க கஸ்தூரிவாடை வீசும்படியாக இரண்டும
னிதர்கள்வரக்கண்டு அவர்கள்மிகுந்தநலமுள்ளோர்கள்போல விருக்கி

ஞர்களென்றும் நன்மைக்குடையவர்களாயுமிருக்கிறார்களென்றெண்ணித்தன்னுடைய கோரிக்கையை யவர்களுக்கு எப்படி சொல்லுகிறதென்றாராய்ந்துகொண்டு நின்றுகொண்டிருக்கையில் அவ்விருவரும் பீவிறஹிமாவின் கிட்டேவந்து ஓ பெண்பிள்ளையே நீயார் சொல்லென்று கேட்டார்கள் அதுகேட்டு என்பெயராகிறது (றஹிமா) நான் அய்யூபுநபியுடையபெண்சாதியென்றுசொன்னார் அச்சொல்லையவர்கள் கேட்டு அய்யூபுநபியாகிறவரெங்களுடைய இஷ்டராயிருக்கிறார் அவருக்கு வியாதியெப்படியிருக்கிறது சொல்லென்றுகேட்டிட அதற்குப் பீவி றஹிமா அவருடைய நோயைக்குறித்துமிகவும்புகழ்ந்து ஊரார்கள் அவர்மேல்சலித்திருக்கிறதையும் ஊரார்கள்சொல்லுகிறசொல்லுகள் யாவையுஞ்சொல்லியுங்களாலெனக்கொருகாரியமிருக்கிறது அதென்னவெனில் அவர் இருஹத்தாகும்படியாகத் துவாச் செய்யுங்களென்றுசொன்னார்.

அதுகேட்டவர்கள் நாங்களவருக்கு துவாச்செய்யமாட்டோம் நீயவரிடத்திற்குப்போனால் எங்களுடையசலாமும்சொல்லுமென்றுபோய்விட்டார்கள்பின்பு பீவிறஹிமா அய்யூபுநபியிடத்திற்குவந்து அக்குடந்தசெய்திகளெல்லா மாதியோடந்தமாகச்சொல்ல அதுகேட்டு அய்யூபுநபிஒருசத்தமிட்டு ஜிபுறாயிலேமீக்காயிலேயென் அன்புள்ளோர்களேயென்றுசொல்லிபீவிறஹிமாவைப்பார்த்து நீயெவ்விடத்தி லம்மலக்குகளைக்கண்டுபேசினாயென்றார் அதற்குபீவி றஹிமா தாங்களிருந்த இவ்வூருக்கடுத்தசின்னவூருக்குப்போயிடம்பார்த்து வைத்துவிட்டுநானிவிடந்திரும்பியிவ்வூர்முச்சந்தியில்வந்துநின்று ஆள்தேடினேன் அந்நோமவர்களிரண்டுபேரையுங்கண்டேனென்றுசொன்னார்பின்புஅய்யூபுநபியே தூக்கிக்கொண்டுபோவதற்காகவேண்டி ஆள்களைத்தேடி வழியில் வந்துநின்றுக்கொண்டிருக்கும்போது நாலு மலக்குகள்மனிதர் வடிவாக பீவிறஹிமாவினிடத்திற்கு வந்து கற்பழியாதபெண்பிள்ளையே உனக்கு ஏதாவதொருகாரியமெங்களிடத்திலுண்டாவென்று கேட்க அதற்குபீவிறஹிமா உங்களிடத்தி லெனக்கொருகாரியமுண்டு அதென்னவெனில் அல்லாகுத்தஆலா உடைய நபி அய்யூபுநபிகுஷ்டவியாதியினால்சஞ்சலப்பட்டிருக்கிறார் அவருடையகூட்டத்தாரெங்களூமவரை யூரிலிருக்கவேண்டாமென்றுஞ்சொல்லுகிறார்கள் அதற்காகநானவரை இவ்வூருக்கடுத்தாப்போல்சின்னவூரிருக்கின்றது அங்கு இவரைக்கொண்டுபோய்வைக்கசுமந்துக்கொண்டுபோக ஆள்களியாருமில்லையென்றுவழிபார்த்து நிற்கிறேன் ஆகையால்நீங்கள்கிருபைச்செய்து தூக்கிக்கொண்டுபோய் அ

ங்குக்கொண்டுபோய் வைக்கில் உங்களுக்கு யிருந்த நல்லூண்டென்று சொல்ல அதுகேட்டு அந்தநாலுபேரும நபியிடத்திற்குவந்து வியாதி யைவிசாரித்து அவருக்கு சுவாத்தியத்தினுடையதுவாவுஞ்செய்தார்கள் பின்பு அந்தநாலருமாக தோல்விரிப்பினுடைய நாலு மூலைகளையும் பிடி த்துதூக்கிசுமந்துகொண்டுபோய் பீவிறஹீமாகட்டியவிடத்தில்வைத்து [illegible]டுதிரும்பிப்போய்விட்டார்கள் அப்பொழுதுபீவிறஹீமாசாம்பல்க ளைக்கொண்டுகீழேபாவி அதின்மேல் அய்யூபுநபியைபடுக்கும்படிசெய்து நபியேநீர் மெத்தைதலையணிகள் போட்டுபடுத்திருந்தநாள் போய்வி ட்டது இன்றுசாம்பலைவிரித்து அதின்மேல்படுத்துகல்லைதலைக்கிணை த்[illegible]கொண்டு சித்திரைச[illegible]க்க[illegible] வேண்டியெழுந்து நில்லுங்க ளென்றுபீவிறஹீமாச்சொல்ல அதுகேட்டு அய்யூபுநபிறஹிமாவேதுவி யாழ[illegible]யை[illegible]ம்அசம்பத்து நியாமத்துகளைக்குறித்துநினைக்கவேண்டா மென்றுசொல்லி அந்தசாம்பலின்மேல்போய் படுத்தார் பின்பு அந்த சாம்பல்மேல்படுத்திருந்துக்கொண்டு உடலின்நோம்பிற்குமுடுகுதலையா னவ[illegible]ருந்த உயர்த்திக்குயர்த்தி யானவனே அதிகறஹமத்துமுள் ளவனே குறைத்தளவேவையென்று அலாலதியாக தஸ்பீகுச்)செய்து ப்புகழ்ந்தார்பின்புபீவிறஹிமா தன்னிடத்திலிருக்கிற ஒடவையில்கொ ஞ்சங்கிழித்து அய்யூபுநபியின்பேரில்போர்த்திவிட்டு அவருடைய பசி யையாற்றுவதற்காகவேண்டிசோறுக்கொண்டுவர அந்தசிற்றூரினுள்பு குந்து அவ்வூராருக்கு யிருந்த உபசாரமானவார்த்தைகளுஞ்சொல்லிச ங்கையுஞ்செய்ய ஐந்துவீட்டில்பத்துரொட்டியைக்கொடுத்தார்கள் அ தைவாங்கிக்கொண்டுஅய்யூபுநபியிடம்வந்து அந்தரொட்டி வகைப்பட்டச ந்தோஷத்தினால்ரொட்டியைநபிக்கிமுன்னேவைத்தார் அதைகண்டு அய் யூபுநபி அந்த ஆலாவைப்புகழ்ந்துடங்கினர் எப்படியெனில் ஓநாயனே யிருந்தபரிசுத்தமுள்ளவன் அபயில்லாதவன் அழிவற்றவன் அவனே னைக்கிறவனை மறக்கமாட்டான் அவனிடத்தில் சுக்கூறுசெய்கிறவனை ருசுபங்கமாக்கான் அவன்மேல்தவக்கல் செய்கிறவனைபழுதாக்கான் ச கல அதிகாரமும்உத்திரவுகளும் சகலவஸ்த்துக்களின்மேல்குதறத்துள் ளவன்சகலமும் அவனுடையநாட்டத்தைக்கொண்டேயிருக்குதென்று பலபலவிதமாகதஸ்பிகுசெய்துக்கொண்டிருக்கையில்பீவிறகிமாதன்பு ருஷனுடைய வியாதியைக்குறித்துசலித்து எண்ணங்கொண்டு நபிசகி ப்பணிவிடைவேலைகள் செய்துவருகிறநாளையில் இபுலீசலஹனத்து ல்லா ஒருவயித்தியனைப்போலவேஷமெடுத்து மருந்துகளுஞ் சூரணங்க ளுந் தயிலங்களும்பற்பங்களும் பலபலமருந்துகள் வயித்தியக்சாமான்கள்

போல தன்னிடத்திலேவைத்துக்கொண்டு பீவிறகிமாவிடத்திற்குவந்துநான்பலஸ்தீனென்னும்பட்டணத்திலுள்ள பெரியபெயர் பெற்றபண்டிதன்நானுன் கணவன் வியாதியாயிருக்கிறசங்கதியைக்கேட்டு அவ்வியாதியை நீக்குவதற்காகவேண்டி அதற்குத்தகுந்தமருந்துக்களெல்லாமெடுத்துக்கொண்டுவந்திருக்கிறேன் நான்சொல்லுமானவார்த்தையை அவரொப்புக்கொள்வாராகில் நாளையதினமவரிடத்திற்கு வருகிறேன் நீநான்வந்திருக்கிறசெய்தியையுமருந்துகள்கொண்டுவந்திருக்கிறசெய்தியையுமவருக்குநன்றாகத்தெரியும்படிச்சொல்லுபிறகு ஓர்க்குருவியாவது அல்லது எந்தபறவையேயாவதுக்கொண்டுவந்து அல்லாவினுடையபெயரைச்சொல்லாமலதையறுத்து அதன் [illegible] கறியாக்கித்தின்று அதற்குமேல் ஒருபுட்டிசாராயங்குடித்தாலதனாலவருக்குசந்தோஷமுண்டாகுமென்றுசொன்னான்.

அவன்சொல்லியவைகளை பீவிறகிமாக்கேட்டு இவன்இபுலீசென்றறியாமல் அய்யூபுநபியிடத்திற்கு வந்து இச்செய்திகளெல்லாஞ்சொன்னார் அதுகேட்டவுடனே அய்யூபுநபியுடைய முகத்தில் [illegible] கோபக்குறிப்புண்டாகி பீவிறகிமாவே பார்த்து கோபத்தோடு நான்சாராயங்குடிக்கவும் அல்லாசொல்லாதப் பறவைகளைத் தின்னவு மெப்போதாவது நீகண்டாயா நீநேற்றுபதினம் ஜிபுறாயில்மீக்காயீல் இவர்களுடைய அதாயிருந்தாயின்றுலஃனத்துப்பெற்ற இபுலீசுடைய ஆதரவாகவந்தாயென்றுகோபித்து அடிக்கஆணையிட்டுக்கொண்டார் அதே பீவிறகிமாகேட்டுதான்செய்தக்காரியங்கள்குற்றமென்றெண்ணி நபியேபார்த்துநான் அறியாமற்செய்தகுற்றத்தைபொறுத்துக்கொள்ளுங்களென்றுஅவருடையமனமிரங்கிபொறுக்குமளவும் வேண்டிக்கொண்டார் அப்போது அய்யூபுநபியினிபேலித்தபடி அந்தலஃனத்து பெற்றவனுடைய சொல்லைக்கேட்கவேண்டாமென்று அச்சமாக்கிவைத்தார்இபுனு அப்பாசு றலியல்லாகு அய்யூபுநபிக்கு அவருடைய நோய் (௰௮) வருஷமிருந்தது அதனாலவருடைய கைக்கால்கள் அசைக்கக்கூடாமற்போயினது அவருடைய உடலின்சதையே புழுக்கள்தின்று இரண்டுகண்களையுந்தலையையுஞ்சுற்றிக்கொண்டிருந்ததுபேசநாவும்-நாடகல்புங்கேட்காது மன்றி மற்றதைத்தின்றுவிட்டதென்றுஞ் சொல்லியிருக்கிறார் இன்னும்கஃபுல்அக்பாறு றலியல்லாகு நபியுடைய நாக்கிலிருந்து சறுத்தபுழுக்கள் புறப்பட்டு பின்பு புறப்பட்டவிடத்திற்குப்போய்ச்சேரும் அதனாலவருக்குமிகுந்தவருத்தமுண்டாகி பொறுக்கவல்லமையில்லாமல் சத்தமிட்டார் அப்போது அல்லாகுதஆலா அப்

யூபே நீயென்னுடைய நியாமத்தின் மேலின்பமடைந்து அதின்மே
ல்சந்தோஷமாகி நீ என்னுடைய பலாமுசிபதுகளின்பேரில் சபறு
ச்செய்யுமென்று வுகயமாயினது அப்படியிருக்கையிலொருநாள் பீவி
றஹீமா அன்னங்கொண்டு வருவதற்காகவேண்டிபுறப்பட்டு ஊர்முழு
துஞ் சுற்றிபார்த்தார்கள் ஒருவீட்டிலொன்றுங்கிடைக்கவில்லைபின்பு
கடைசியில் ஒருகிழவினுடைய வீட்டின்வாசற்படியில் போய்நின்று
பார்க்கும்போது அவ்வகத்தின்கதவடைத்திருக்கக்கண்டு அக்கதவைத
ட்டினா அந்தசத்தத்[illegible]க்கேட்டு அக்கிழவி வீட்டினுள்ளிருந்து கத
வையார்தட்டுகிறதென்று கேட்க அதற்கு பீவிறஹீமா நான் அய்யூபு
நபியுடைய பெண்[illegible]யென்றுசொல்லிட அதுகேட்டு கிழவிவந்துக
தவைத்திறந்து ஏனென்றுகேட்க அதற்குபீவிறஹீமா இந்நாளிவ்
வூர்[illegible]ங்கலும் அன்னத்திற்காக சுற்றி அலைந்தேன் எங்கேயுமொருபிடி
அன்னமகப்படவில்லை யின்று அய்யூபுநபி மெத்தவும்பசித்திருக்கிறு
ரென்று சொல்லிட அதுகேட்டுக்கிழவி (ஓ) றஹீமாவே என்னுடை
யமகளுக்கு நான்கலியாணஞ்செய்தேன் ஆகையா லின்றிரவு அவளை
சிங்கா[illegible]க்கவேண்டியதாயிருக்குது அவளுடைய தலையில் ரோமங்கொ
ஞ்சமாக அளவில்லாமலிருக்குது அவளுக்குஉன்னுடைய கொண்டை
யிலிருந்து அவளுடையகொண்டைக்கிப்போதுமானரோமங்கொடுப்
பாயாகில் அதற்குபதிலாவாக உனக்கிரண்டு ரொட்டிகொடுக்கிறே
னென்றுசொல்ல அதற்குபீவிறஹீமா தலையிலிருக்கிறரோமத்தையெப்
படி அறுத்துக்கொடுக்கிறதென்று சொல்ல அதற்குக்கிழவியுன்னு
டையரோமம் நீண்டிருக்குது அதிலறுத்தால் தெரியாதென்றுசொன்
னாள் அச்சொல்லைக்கேட்டு பீவிறஹீமாநான்ரோமங்கொடாவிடில் நீ
ரொட்டிகொடுக்க மாட்டாயோவென்று கேட்க அதற்குக்கிழவிநான்
ரொட்டிகொடுக்கமாட்டேனென்றுசொன்னாள்.

அப்போது பீவிறஹீமா அவள்சொன்னதைக்கேட்டு மிகுந்த
விசாரமாகிநபி[illegible]சியாயிருக்கிறாரேயென்றுநினைத்து அப்பசியையடக்கு
வதற்காகக் [illegible]ழவியின்சொற்படிதலையின் ரோமத்தை கொடுத்துவி
ட்டு இரண்டு[illegible]ரொட்டியைவாங்கிக்கொண்டு பசியாற்றிவைக்க நபியிட
த்திற்குவந்தார் அப்போது அய்யூபுநபிறஹீமாவேபார்த்து இந்தரொ
ட்டியெங்[illegible]துகொண்டுவந்தாய்ச் சொல்லென்றுகேட்க அதற்குபீ
விறஹீமா நபியைப்பார்த்து நாளாடங்கலுமலைந்து கடைசியில்கிழவி
யிடத்தில் நடந்தசங்கதிகளைபாவற்று ஆதியோடந்தமாகச் சொல்லி
னார் அந்தச்செய்தியடங்கலையும் அய்யூபுநபிகேட்டு ஒருசத்தமிட்டு ன

ன்னுடைய (நபியே) என்னைக்குற்றத்தை நான்செய்ததினால் உன்னு
டையகிருகமத்தாகிய முகத்தை யென்னைவிட்டுதிருப்பிக்கொண்டாய்
அதையின்னதென்றறிந்து உன்னிடத்தில் பிழைபொறுக்கத்தேட
எனக்குத்தெரியவைத்தென்னுடையாயனே யிந்தவியாதியினால் வருத்த
ப்படுவதற்காகிலுமவசதாய் விடுகிறது யிருந்த எளிதாயிருக்குமென்
றுசொல்லி விசனப்படும்போது அப்போது அந்த ஆலாஉன்னுடை
ய மொழியைக்கேட்டேன் உம்முடையவருத்தத்தால் நீரிறக்கமாட்
டீர் இந்தவருத்தத்திற்குமதிகவருத்தம் வந்தாலுமதிலுமிறக்கமாட்டீர்
உடன்சாலாயிருந்து அவ்வியாதியின் வருத்தத்தினால் வருந்தியிருக்கும்
போது அதைசபூர்செய்திருக்கிறவர்களுக்கு [illegible] சுவாத்தியமாயி
ருக்கப்பட்டமனிதர்களுடைய தரஜாவிற்குமதிகதரஜாவை கொடுக்க
ப்படும் நீசெய்யுஞ்சபூருக்கு நாளைப்பதில்பிரயோஜனத்தைக்கொடுப்பே
னென்று (வஹி) வந்தது அதுகேட்டுமிகுந்தசந்தோஷமாகி என்னை
க்கெல்லாம் நீங்கிவிட்டது இன்னம் அய்யூபுநபிக்குமிகுந்தபிரியமு
ள்ள இஷ்டர்கள் மூன்றுபேரிருந்தார்கள் அதிலொருவர் யமனதேச
த்தார் அவர்பெயராகிறது (வகல்) இன்னொருவர்பலஸ்தீன்தேசத்தார்
அவர்பெயராகிறது (முகீனு) மற்றொருவர் ஷமமஸ்ஸின்தேசத்தார்
அவர்பெயராகிறது பலத்து) இம்மூவரும் அய்யூபுநபிக்கு அடுத்தஅ
சுகாபுகளாயிருந்தார்கள் அவர்களுக்கு வேண்டுமானஉதவியொத்தா
சைகள்செய்துமிருந்த சங்கைகளுமிவர்களுக்குச்செய்துக் கொண்டிருந்
தார் அம்மூவரும் அய்யூபுநபிவியாதியானநாள்தொடுத்து தினகால
மும்வந்து நபியைப்பார்த்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள் அப்ப
டிநடந்தேறிவரும நாளில் நபிக்கு நோயானது அதிகப்படவும் அதுக
ண்டு அவர்கள்சலித்து வெறுத்துப்போனார்கள் அதனாலவர்கள் அம்
மூவரும்காலத்தின் ஆலிம்களாயிருந்தார்களிவர்கள் அன்றுசிலமனிதர்
களைப்பார்த்து அய்யூபுநபிஉண்மையானச்சொல்லைசொன்னவருமுண்
மையானவருமல்ல அப்படியவர்உண்மையானசொல்லையும் உண்மையு
முள்ளவராயிருந்தால் இந்தபலாமுசீபத்திலகப்படமாட்டாரென்றுசொ
ல்லிட அப்போது எல்லாமொருமித்து நாமவரிடத்திலிருந்துப்போய்க் க
டினமாகக்கோபித்து அவருடைய குற்றமானநடப்பை குறித்து கடி
னமாகக்கேட்கவேணுமென்று கூடி யெல்லாரும் அய்யூபுநபியிடத்
திற்குவந்து அனேகவார்த்தைகளை யவருடன்பேசி கடைசியில் (ஓ)
நபியே உம்முடையவியாதியெங்களையெல்லாம் அதிசயப்படும்படியாவை
க்குதே உம்முடையவேலைகளெல்லாமெங்களை சலிக்கும்படியாவுமவே
ஷட்டையும்படியாவும் வைக்கின்றதே நீரோ உலகத்தில்நடக்கை

யானவே லகளையெல்லாம் மிகுதமாகச்செய்துக்கொண்டிருந்தீர் இன்
னமும் அல்லாவினுடைய படைப்புகளுக்கு இரப்ப கலங்களுஞ்செய்து
க்கொண்டிருந்தீர் இப்படியாதாமொருவனுலகத்தில் நன்றியும் உதவி உ
த்தாசையும் செய்வானுகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா மிகுந்த வரிசை
யும் கவுரவங்கொடுப்பான் நீர் மிகுந்த அமல்களும் கயிர் தயிறாத்துகளுமா
றுமல் செலுத்தவாகனபடியினாலே இப்படிப்பட்ட பலாமுசிபத்துக
ளும் வருத்தமுமுபக்கேன் வந்தது இதைப்பார்த்தால் நீர்செய்த கண
க்க மும நன்றியுந்தருமமும் தப்பானா நீபத்தின பேரிலில்லை அப்ப
டி அப்பானவானதாயிருந்தால் உமக்கிப்படி நீண்ட வியாதியேன் வருகிற
து வந்தாலும் விலகிப்போகாதாவென்று பலபலவிதமாகக்கடுஞ்சொல்
லாகமனா நிற்துப்புறப்படியாக சொல்லினார்கள் அச்சொல்லை அய்யூபுந
பி கேட்டு ஒ என் கூட்டத்தார்களே நீங்கள் ஒன்றுமறியாமல் அறிவற்றவ
ர்களாயென்னுடன் கடிந்து கோபங்கொண்டு பேசுகிறீர்கள் இன்னமு
மென்னுடைய கூட்டத்தார்களென்னைக்கொண்டு முகந்திருப்பி மாறுசெ
ய்தார்கள் இப்போது எல்லாமருந்துகளும் என்னைக்கொண்டு வெளியாயி
னது எனக்கு அல்லாஹுத்தஆலாவுடைய உதவியைக்கொண்டு ஆதாரவு தேடுகி
றேனே யொழிய மற்றொருவருடைய ஆதரவு நாட்டவில்லை அவனெப்படி
ப்பட்ட குதறத்துள்ளவனெனில் தன்னுடைய அடியார்கள் பேரில் தா
[illegible]படியே வியாதி முசிபத்துகளை விட்டு சோதிப்பான் அதனால் அவர்
களுக்கு மிகுந்த கூலிகளைக்கொடுப்பான் இதுபோலவே நபிமார்களையும்
சாலிகீன்களாகளையும் பலபல விதமான முசிபத்து பலாக்களினால் சோதி
க்கிறான் அதனால் அவர்களும் மிகுந்த பலன்களைப்பெற்றுக்கொள்ளுகிறார்
களென்று சொல்லிவிட்டு பின்பு தன்னுடைய கண்பார்வையை வானத்
தின்புறமாக வுயர்த்தி என்னுடைய (றப்பே) என்னுடைய [illegible]க
ளுக்கு என்னைக்கொண்டு சந்தோஷமுடையவைக்காதே என்னையுங்கு
தறத்துள்ள பார்வைத்திருப்பிக்கொள்ளாதே யென்றேனைவிட்டு நா
னொரு(லை அத்துமட்டும)சுவாதந்தியமாயிருக்கும்படி செய்யென்று துவா
க்கேட்டார்.

அப்போது அல்லாகுத்தஆலா அய்யூபே யென்னுடைய குதற
த்தின் பேரிலும் வல்லுப்பத்தின் பேரிலும் கிருபையின் பேரிலும் உமக்கு
ச்சந்தேகமில்லையென்று நானறிந்திருக்கிறேன் அய்யூபே நானுன
ன்னை வந்தனைக்கொடுத்ததெல்லாம் என்னுடைய சட்டத்
திலிருந்துதான் நீ பொறுமையாயிப்படிப்பட்ட பலாமுசிபத்தைக்கொண்டு
பிடிப்பேனுகில் அவர்களந்தபலாமுசிபத்தினால் எனக்கு வழிபடுவதை
க்கொண்டு முகந்திருப்பிக்கொள்ளமாட்டார்கள் எனக்குமாறு செய்கிற
கூட்டத்தார்கள் அறிகிறதற்காக வேண்டி யென்னுடைய மஹாபிக்குமத
னாகிறது எல்லாவஸ்துகளின் பேரிலுமுண்டேன்னுடைய மஹாபிக்குமத்தி
னகிறதை யைக்கொண்டு உன்னுடைய அசாவை நீக்கிப்போடுவேன் ஆ
கையால் உன்பேரில் உன்னுடைய அஸ்ஹாபுமார்கள் கோவித்துக் சொ
ன்னார்களே அதற்காக வேண்டி அவர்களைத் தவுபாச செய்யச் சொல்லு

ம் அப்படிசெய்யாவிடில் அவர்கள்பேரில்என்னுடைய அசாபையிறக்கு
வேனென்று (ஒகி) வந்தது அதை அப்யூபுகபிதம்முடைய இனேடர்களா
கியமூன் [illegible]ளுக்குஞ்சொல்லிட அவர்கள்கேட்டு அந்தஆளாவி
றதப்பய[illegible]ாக்காக்காபித்ததைநினைத்துகைசேதப்பட்டழுது உட
னேதவ்பாச்செய்துபோய்விட்டார்கள் அன்றுபோயமற்றுநாள் வெள்
ளிக்கிழமைவந்தது அன்றுசவாலுடையவேளையில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸ
லாம் அப்யூபுகபியிடத்திற்குவந்துசலாஞ்சொல்ல அதற்குஜவாபுஞ்
சொன்னா அப்போது அப்யூபுகபியவனைப்பார்த்து அல்லாவினுடைய
அப்தமிருந்தஅழகான வடிவுள்ள குமாரனாகவும்நல்லதுப்பரமான
வாசனையும வீசுகின்றநீயார் சொல்லென்றுகேட்க அதற்கவர் எல்
லாஆலங்களையும்படைத்தாருகிற றஹமானுடைய தூதாகிய ஜிபுரா
யீல்நானின்று அவனுடைய கிருபையைக்கொண்டும் பெருமைத்தைக்
கொண்டும் கீாகல்மாராயமான சீரகுவாத்தியத்தைப் பெற்றுக்கொள்
ளும் உன்னுடையபிள்ளைகளையும் பணங்களையும உடைமைமுதலியம
ற்றெவைகளையும் உனக்கு ஆண்டவன் கொடுத்தானென்று சொல்ல அ
தைகேட்டு அப்யூபுகபி மட்டில்லாதசந்தோஷம்பொங்கி அழுதுஎல்லாப்
புகழும் எல்லாஆலங்களையும்ப[illegible]த்து ஆளுகிறவனுக்காக விருக்கும்
அவன் மகா கிருபையுள்ளவன் கு[illegible]ள்ளவன் ம[illegible]ருபையுள்ளவன்
என்னுடையபகைவனுகிய இபுலீசைக[illegible] அவ[illegible]ச்சோந்தர்
களைக்கொண்டும் என்னைசவினால் சந்தோஷமாக்கிவைக்கவில்லையே அ
ந்த றப்பை) நான்புகழுகிறேனென்றுசொல்ல அப்போது ஜிபுரீல் அ
லைஹிஸ்ஸலாம்அப்யூபுகபியையெழுந்திருக்கச்சொன்னார் அப்போது
கபியெழவல்லமையில்லாதபடியினால் அவருடைய வலதுகையைப்பிடி
த்து அந்தஆலாவினுடைய உத்தரவைக்கொண்டு எழுந்திரென்
றுசொல்ல அப்யூபுகபியெழுந்தின்றார் பின்புஜிபுறையீல்நபியேஉம்மு
டையகாலைப்பூமியின்மேல்தட்டுமென்றுசொல்ல அதேபடிதட்டிட கா
லின்கீழிருந்துபனிதண்ணீருக்குவெண்மையாகவும் தேனிறகுத்திப்
பாகவும் கஸ்தூரிக்குஅதிகமணமாகவும் ஊற்றுக்கிளம்பி யோடினது
அப்போதுஜிபுறையீல்அந்நீரைக்குடிக்கச்சொன்னார் அப்படியேகுடித்
திட அவருடலிலிருந்தபுழுக்களெல்லாம பலபலவென்று இலையுதிர்வ
துபோல் பூமிமேல்விழுந்துவிட்டதுகளதனாலவருடையசரீரமெல்லாம்
பரிசுத்தமானவெள்ளியைப்போலாய்விட்டது அப்போது அப்யூபுகபி
புழுக்களுடைய உருப்பத்தையும் வலுப்பத்தையும் கண்டு அதிசயப்ப
ட்டார்கள் பின்புஜிபுறையில் அ நீரில் முழுகுமென்றுசொன்னார் அதே
படிமுழுகிட அதனாலவருடைய முகம்பகினாலாம்பக்கத்து நிலவுபோ
லாய் முன்னிருந்த அழகிற்குமும் மடங்கதிகமாய்விட்டது.

பின்புஜிபுறையீல் அலைஹிஸ்ஸலாம் இரண்டுபிடவையைக்கொடுத்
தார் அதேவாங்கி ஒன்றைக்கட்டிக்கொண்டு மற்றொன்றைப் போர்த்
துக்கொண்டார் அதின்பின்பு முத்துவாத்தினங்கள்பதித்தபொன்னா
ல்பண்ணப்பட்ட பாதரட்சையைக்கொடுத்தார்பின்புசுவர்க்கத்தினுடை

ய இச்சிவிப்பழமொன்றைக்கொடுத்தார் அதேவாங்கி பாதிப்பழத்தை
தின்றுவிட்டு பாதிப்பழத்தை பீவிறஹிமாவிற்காகமீந்தது வைத்திடக்க
ண்டு ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் அதையுந்தின்றுவிடும் பீவிறஹிமாவி
ற்காக என்னிடத்தில் இன்னமொருபழமிருக்குதென்றுசொல்லிட அ
துகேட்டு பாதிப்பழத்தையுந்தின்றுவிட்டுத் தொழுதுகொண்டிருந்தார்
இப்படிநடந்திருக்கையில் பீவிறஹிமா தன்புருஷனுக்காகஅன்ன மூ
ழெல்லாந்தேடிச்சுற்றிப்பார்த்துவருகையில் எந்தவீட்டிலும்ஒருபிடிசோ
றுவாது கொட்டியாதுபோடாமல் வெருட்டினார்கள் அன்றனுணகப்
படாத்தைகதறித்து மிகுந்தசலிப்போடுநபியிடத்திற்குவந்து நபியை
ப்பார்க்கும்போது அந்தஇடத்துப்பரவாவு மனிதனுந்துப்பாரவாகவிரு
க்கக்கண்டுபிரமித்து நம்மவழிதப்பிவந்துவிட்டோமோவென்றுஎண்ணி
பின்புநன்றாய்ய சித்துப்பார்க்குப்[illegible]து நாம்வழிதப்பிவரவில்லையெ
ன்று கொஞ்சசஞ்சந்தேகத்துடன் ஓ தொழப்பட்டவரேயென்புறமாக
த்திரும்புமென்றுசொல்ல நபிதிரும்பாமலும் பேசாமலும் தொழுதுக்
கொண்டிருந்தார் தொழுதமுடிவானவுடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம்
நபியேநீர்பீவிறஹிமாவின்புறம்திரும்பிப்பேசுமென்றுசொன்னார் அது
கேட்டு அய்யூபுநபிபீவிறகிமாவின்புற[illegible]த்திரும்பிப்பார்த்து ஓபெண்
பிள்ளையே யென்னிடத்திலுனக்[illegible]கென்னகாரியமிருக்கிறது சொல்லெ
ன்[illegible]கேட்டார் அதுகேட்[illegible]விறகிமா இவர்அய்யூபுநபியென்றறியா
மல்வேற்றுமனிதனென்றெண்ணி ஓமனிதனே கோயபிடிச்ச அய்யூபுந
பியிவிடத்திலிருந்தாரே அவரைக்காணேன் அவரெங்கேபோனார் அவ
ருடையசெய்தி யுமக்கேதாவது தெரியுமா அந்தக் கடின் நோய்
கொண்டவரை காளிவ்விடத்தில்விட்டுவைத்துவிட்டு அவருடையபசி
யாற்றிவைப்பதற்காக இவ்வூருக்குள்புகுந்து பின்னுமிங்குவந்து பார்க்
கும்போது அவரைகாணவில்லையென்று மிகுந்தவியாகூலமாகச்
சொல்லிட அதுகேட்டு அய்யூபுநபி சிரித்து நீயவரைப் பார்த்தா
ல் இன்னாரென்றறிவாயாவென்றுகேட்கஅதற்குப்பீவிறஹிமா அவ
ருக்குநோய்பிடிக்குமுன்னாலே ஐந்து அடையாளமுண்டு அவ்வடையா
ளமுமமிடத்திலிருக்கிறபடியால் அவர்தான்நீயென்றுசொல்லலாம் ஆ
யினும் அவர்இப்போதுவியாதியுள்ளவரா யிருக்கிறாரென்று சொல்லி
ட அதுகேட்டுநபிசிரித்து நான்தான் அய்யூபுநபியென்றுசொல்லி ஜிபுரீ
ல் அலைகிஸ்ஸலாஞ்செய்தகாரியமுழுதுஞ் சொல்லிட அச்செய்திகளை
யெல்லாம் ஆதியந்தமாகக்கேட்டுபீவிறகிமாஓடோடியும்வந்து அய்யூ
புநபியுடையகழுத்தைகட்டிக்கொண்டார் பின்பு அல்லாகுத்தஆலா
அவருடையபிள்ளைகளையும் அடிமைகளையும் வெள்ளாட்டிகளையும்மிரு
கசாதிகளையும்தோப்புவயல்களையுமுன்போலகொடுத்துமின் பகர்மே
ல் அல்லாகுத்தஆலா பொன்னால் பண்டமுண்டவெட்டுக்கிளியின்
மழையைப்பெய்யவைத்தான் அப்போது அய்யூபுநபிதன்பேரில் பெய்
தபொன்வெட்டுக்கிளியின் மழையேபெய்யவைத்தானே அந்தக் கிளிக
ளைப்பொறுக்கி தன்னுடையவஸ்திரத்தில்சிரப்பிக்கொண்டார் அப்போ
து அல்லாகுத்தஆலா ஓ அய்யூபே உன்னுடையபிழைதவில்லையா

வென்றுகேட்கஅதற்குஅய்யூபுநபி யென்னுடைய (றப்பே) உன்னு
டையபலாவைக்கொண்டு என்னுடையவயிறு நிறையவில்லை அப்படியிரு
க்கஉன்னுடைய றஹமத்தைக்கொண்டு யாருடையவயிறும் நிறையா
தெனச்சொன்னவுடனே மூகம் துநபிசல்லல்லாகு அலைகிவசல்லம அதி
ருவளாயிருக்கிறார்களென்று அபு... றுறவியல்லாகுசொல்லியிருக்
கிறார் இன்னமுமீதன்றி அய்யூபுநபிக்குபோயாடிசகுர் தலமிரண்டு உ
ண்டாயிருந்தது அந்தஇரண்டுகலத்திலும் ... யுமபடிபாத அல்லாகு
ததஆலா இரண்டுமேகத்தையனுப்பினான் அந்தமேகமிரண்டில் ஒருமே
கம்பொன்மழைபெய்தது மற்றொருமேகம்வெள்ளியினால் மழைபெ
ய்தது அந்தஇரண்டுமொன்றுடொன்றுகலந்தோடினது இன்னமு
ம்அல்லாகுத்தஆலா அய்யூபுநபிக்குபொன்னால்பண்ணுண்ட (சவித)
பெண்ஒட்டகமும்(உயத) ஆண்ஒட்டகமும்(சவித)வெள்ளடும் (நுத)
அடிமைகளும்வெள்ளாட்டிகளுங்கொடுத்து அவருடையகேட்டங்க
ளைச்செழுமையாக்கினான் அந்தேட்டகசலில் சதபேஸ்த்ரியர்களி
ருந்தார்கள அவர்களுக்குமாதமாதம் சம்பளமிகுதியாகக் கொடுப்பார்
இதற்முன்னால்அய்யூபுநபிக்கு (மஉத) ஆண்பிள்ளையும் (மஉத)பெண்
பிள்ளைகளுமுண்டு அவர்களை... முராசசியத்தை அல்லாகுத்த ஆ
லா அவருக்குச்சொந்தமாக்கினான் இன்னமவருக்கு நீண்ட வயதையுங்
கொடுத்தான் அதனாலவர்மிகுதியாக ...மும் நன்னடைப்பும் நல்லவொ
ழுக்கமுமாகவும் அவருமளவும் சேஷமமாகவிருந்தார் அப்படி நடந்து
வரும்நாளையில் அவருக்குமவுத்துடையவேளை கிட்டேநெருங்கினதுகிஸ்
போது தன்னுடையபிள்ளைகளையெல்லாமுன்னழைத்து வைத்துக்
கொண்டு நான் ஏத்தீமானவர்களுக்கு மிஸ்கீன்களுக்கும் பக்கீர்
களுக்கும்எளியோர்களுக்கும் தானெப்படி யுதவி ஒத்தாசைச்செய்து
க்கொண்டுவருகிறேனோ அதுபோல ஒருஅணுவளவும்பிசகாமல்செய்துநே
ர்வழிபெற்றுக்கொள்ளுங்களென்று வசீயத்துச்செய்தார்பின்புமவ்வி றுகி
மாக்குருன்னு வந்தபோ...க்கும்போது அந்தநோய்தீர அல்லாவின்
பேரைச்சொல்லி அப்க்காபலு... குடிக்கும்படியாகவும்நபிக்குச்
சொல்லென்று சொன்னனே அந்தச்செ...லை மிவிறகிமாநபிக்குவசஅ
சொல்ல அதைகேட்டு அய்யூபுநபிவிறகினாலை அடிக்கும்படியா
கஆணையிட்டு கோபித்துக்கொண்டாரே அதற்காகவேண்டி (ஈ) காம்
புள்ளபேரீச்சங்குலையொன்றெடுத்து அதனால் ஒருஅடியடித்தார் பி
ன்புஅந்தஆண்டவன்கட்டளையின்படி பூவுத்தாய்ச்சுவர்க்கஞ்சேர்ந்தவி
ட்டார. பின்பிவிறகிமா அவருக்குமுன்னேமவுத்தானதொன்றும் பின்
னால்மவுத்தானதொன்றும் வந்திருக்கிறது அய்யூபுநபி தன்காலைக்கொ
ண்டுதட்டியதண்ணீர் ...நாருகில்அடக்கப்பட்டது பின்
பு அவருடையபிள்ளைகள் ... வசியத்துச்செய்தபடிநடந்துவந்தா
ர்கள் ஆமீன் ஆமீன்.

தாறீபில் ஆலமீன்.

முற்றிற்று.